2023 அக்டோபர் – டிசெம்பர்

# அயலவர்



இன்பமும் நல்லிணக்கமும் நிறைந்த இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராணுவத்தின் தலைமையில் வீடற்றோருக்கு 3044 ற்கும் அதிகமான புதிய வீடுகள்.





பல்வேறு பொருளாதார இன்னல்களுக்கு மத்தியில் வாழும் குடும்பங்களுக்காக புதிய வீடுகள் அமைத்து கொடுக்கும் இராணுவ திட்டம் 2009 ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இராணுவம் மற்றும் சிவில் மக்களிடையே நல்லிணக்கம் உருவாகுவதற்கும் போரின் பின்னர் மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதனை, வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கும் இந்த திட்டம் பெரும் உபகாரமாக அமைந்தது . இந்த திட்டத்தின் கீழ் இதுவரை நாடளாவிய ரீதியில் 3044 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதோடு இன்னும் 22 வீடுகள் இராணுவ சிப்பாய்களின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
15 JUN 2024
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்







யாழ், வன்னி, முல்லைத்தீவு, கிழக்கு, மத்திய மற்றும் மேற்கு உட்பட்ட அனைத்து பாதுகாப்பு படைத்தலைமையகங்கள், படையணி தலைமையகங்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்வதோடு, அது வெறும் வீடுகள் அமைத்துக் கொடுப்பது மாத்திரமின்றி வீடற்ற குடும்பத்தினருக்கு வாழ்வாதார வழிமுறைகளை மேற்கொள்வது வரை விரிவடைந்துள்ளது.

இந்த மனிதாபிமான பிரயத்தனத்திற்காக இராணுவம் வழங்கும் பெரும்பங்களிப்பு மக்களின் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இராணுவம் நாட்டை பாதுகாப்பவர்கள் மட்டுமல்ல. அவர்கள் தம் நாட்டு மக்களின் அபிவிருத்தி பணிகளிலும் தம் பங்களிப்பை வழங்குபவர்கள் . இந்த ஆரம்பமானது இலங்கை மக்கள் ஓர் தாய் மக்களாக இணைந்து எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள முடியும் என்பதை பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளது, என்றால் அது மிகையாகாது.











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# இராணுவத்தின் 74 வது வருட நிறைவை முன்னிட்டு கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளியில் விசேட இஸ்லாமிய மத அனுஷ்டானங்கள்.



இராணுவத்தின் 74வது வருடத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இஸ்லாமிய ஆசிர்வாத பூஜைகள் 2023 அக்டோபர் 04 திகதி கொள்ளுப்பிட்டி, ஜும்மா முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்றது. இலங்கை இராணுவத்தில் கடமையாற்றும் முஸ்லிம் அதிகாரிகளும் சிப்பாய்களும் இந்த புனித நிகழ்வில் கலந்துகொண்டு மத அனுஷ்டானங்களை மேற்கொண்டு இராணுவத்திற்கு நலம் பிரார்த்தித்தனர். இந்நிகழ்வின் பிரதான அதிதியாக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே அவர்கள் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பள்ளிவாசலின் அறக்கட்டளையின் தலைவர் அல் – ஹாஜ் முஸ்லிம் சலாஹுதீன் அவர்கள் அன்றைய நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இராணுவ தளபதிக்கு தம் அறக்கட்டளை சார்பாக நினைவுச்சின்னமொன்று வழங்கினார். அதேபோன்று அறக்கட்டளையின் செயலாளர் இராணுவ தளபதிக்கு புனித அல் குர்ஆனின் பிரதியொன்றை அன்பளிப்பு செய்தார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







## 74 வது வருட நிறைவை கொண்டாடும் இராணுவத்திற்கு மயூரபதி அம்மனின் ஆசிகள்...

அக்டோபர் 10ம் திகதி இடம்பெற்ற இலங்கை இராணுவத்தின் 74 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு 06 இல் அமைந்துள்ள மயூரபதி அம்மன் ஆலயத்தில் இந்து மத அனுஷ்டானங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2023 அக்டோபர் மாதம் 05 ம் திகதி இடம்பெற்ற இந்த பூஜை நிகழ்வின் பிரதம அதிதியாக இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே கலந்து கொண்டதுடன் இலங்கை இராணுவத்தின் கொடிகளுக்கு மயூரபதி அம்மனின் ஆசிர்வாதங்கள் பெறும் பொருட்டு கொடிகள் கோயில் கருவறையில் வைக்கப்பட்டு பூஜைகள் நடத்தப்பட்டன. ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ ரிஷி குருக்கள் தலைமையிலான அந்தணர்கள் இராணுவத்திற்கு ஆசி வேண்டி பூஜைகளை நடத்தினர்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவையுள்ளோருக்கு தலைக்கோர் நிழல்

**இராணுவத்தின் தொழிநுட்பம் மற்றும் மனிதவள ஒத்துழைப்புடனும் பூரண ஒருங்கிணைப்புடனும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணித்து வழங்கும் "தலைக்கோர் நிழல்" திட்டத்தின் கீழ் இதுவரை இராணுவத்தினால் நன்கொடையாளர்களின் நிதி அனுசரணையில் பலநூறு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அவசியமுள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மற்றும் முல்லைத்தீவு எனும் பாதுகாப்புப் படை தலைமையகங்களின் கீழ் செயற்படுத்தப்படும் "தலைக்கோர் நிழல்" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில வீடமைப்பு திட்டங்களின் சிறப்புத் தருணங்களை இங்கு காணலாம்.**




இராணுவத்தின் வேண்டுகோளின் படி யாழ் பாதுகாப்பு படைத்தலைமையக ஒருங்கிணைப்பில் அவுஸ்திரேலியாவின் *'Imagine Compassion International Ltd'* நிறுவனத்தினர் வழங்கிய நிதியுதவியின் மூலம் உரும்பிராய் பிரதேசத்தின் அவசியமுள்ள குடும்பமொன்றிற்காக புதிய வீடொன்று இராணுவத்தினால் அமைக்கப்பட்டது. இது இராணுவ வீடமைப்பு திட்டத்தின் 771 வது வீடாகும்.




தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரீபதி அவர்களின் வேண்டுகோளின்படி, தம் விசேட தேவையுள்ள குழந்தையுடன் மிகவும் சிரமமான நிலையில் வாழ்ந்து வந்த வேலாயுதம் லிங்கேஸ்வரன் ஷர்மா அவர்களுக்கு இராணுவத்தினால் புதிய வீடொன்று அமைக்கப்பட்டு 2023 நவம்பர் மாதம் 03ம் திகதி வழங்கப்பட்டது. தம்பலகாம பிரதேச செயலகத்தினால் கிடைக்கப்பெற்ற நிதி மற்றும் பொருள் உதவியுடன் இாணுவத்தின் தொழிநுட்ப மற்றும் சிரம ஒத்துழைப்பின் மூலம் 13.5 இலட்ச ரூபாய் செலவில் குறித்த வீடு அமைக்கப்பட்டது.

**ஜீவநகர்**





பொருளாதார நெருக்கடிகளால் துன்புறும் முல்லைத்தீவு ஜீவநகர் பிரதேசத்தில் வசித்திருக்கும் கே ராஜா அவர்களுக்கு 643 வது காலாட் பிரிகேட் மற்றும் 8வது பீரங்கி படையினர் இணைந்து புதிய வீடொன்றை அமைத்தனர். குறித்த வீடு 2023 அக்டோபர் மாதம் 13ம் திகதி முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தலைமையக தளபதியின் தலைமையில் பயனாளிக்கு வழங்கப்பட்டது. குறித்த வீட்டை அமைப்பதற்கான சிரம மற்றும் தொழிநுட்ப பங்களிப்பு இராணுவத்தால் வழங்கப்பட்டதுடன் வீட்டை அமைப்பதற்கு அவசியமான நிதி அனுசரணைகள் சமூக நல விரும்பிகளால் வழங்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் சிறாரின் எதிர்காலம் வளம்பெற...!



### ஜெயபுரம்

55 வது காலாட் படைப்பிரிவிற்குரிய கட்டளை பிரதேசத்தின் 10 பாடசாலைகளை மையமாகக் கொண்டு அப்பிரதேசத்தின் 2023 ம் வருடத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 253 மாணவர்களுக்காக கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் கல்விக்கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. குறித்த கருத்தரங்கு 2023 அக்டோபர் 08ம் திகதியன்று இடம்பெற்றது.

### முகமாலை

"இளந்தென்றல்" பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் 14 சிறுவர் சிறுமிகளுக்கு போசாக்கான பகலுணவு வழங்கும் நிகழ்வொன்று 2023 செப்டெம்பர் 23 மற்றும் 27 திகதிகளில் கெமுனு ஹேவா படையணியினரால் நடத்தப்பட்டது.






### யாழ்ப்பாணம்

யாழ் குடாநாட்டின் குறைந்த வருமானமுடைய பிள்ளைகளின் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்தும் நோக்கில் 51வது காலாட் படைப்பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில மொழிப்பயிற்சி கற்கைநெறியின் தேர்ச்சி மட்டத்தை அறிந்துகொள்ளும் பொருட்டு 2023 அக்டோபர் 20ம் திகதி 51 வது படைப்பிரிவு தளபதி சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டார். அதன்போது அவர் அங்கே கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

### வல்வெட்டித்துறை

அவுஸ்திரேலியாவின் 'சாக்கியமுனி' விகாரையின் நிதியுதவியில் வல்வெட்டித்துறை கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயத்தின் மாணவர்களுக்காக பாடசாலை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வொன்று 2023 செப்டெம்பர் 18 ம் திகதியன்று இடம்பெற்றது. 11 வது விஜயபாகு காலாட் படையணி சிப்பாய்களால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் முஸ்லிம் மாணவர்கள் இனிதே நிறைவு செய்த சிங்கள கற்கைநெறி






ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் இடம்பெற்ற தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளுக்கான "சிங்கள மொழி" டிப்ளோமா சான்றிதல் வழங்கும் நிகழ்வில், கிழக்கு பாதுகாப்பு படை தலைமையக தளபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சிங்களம் மற்றும் தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையில் , நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் குறித்த பிரதேசத்தின் தமிழ் பேசும் இளைஞர்களுக்காக மட்டக்களப்பு மாவட்ட பிரஜைகள் சபை இந்த இலவச சிங்கள மொழி கற்பித்தல் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. டிப்ளோமா பாடநெறியை ஆர்வத்துடன் கற்ற 290 தமிழ் பேசும் இளைஞர்கள் அன்றைய பிரதம அதிதியான கிழக்கு பாதுகாப்பு படை தலைமையக தளபதியிடமிருந்து தம் திறமைக்கான சான்றிதழைப் பெற்றுகொண்டனர். அதேபோன்று, தமிழ் கற்க ஆர்வமுள்ள சிங்கள இளைஞர்களுக்கு தமிழ் மொழி அறிவை வழங்கும் நோக்கத்துடன் சிங்கபுர மகா வித்தியாலயம் மற்றும் நெலும்வெவ மகா வித்தியாலயத்தில் தமிழ் மொழி பாடநெறிகளை கிழக்கு பாதுகாப்பு படை தலைமையகம் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன்போது உரையாற்றிய தளபதி சமூகத்தை மேம்படுத்துவதற்கும் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கும் மொழியை கற்றுகொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு தமிழ் கற்பித்தல் திட்டத்தை ஒரு வாரத்திற்குள் ஆரம்பிப்பதாகவும் இதன் போது தெரிவித்தார். மேலும் இந்த சமூகப் பிரச்சினைக்கு சரியான நேரத்தில் தீர்வுகாண முனைந்த மட்டகளப்பு மாவட்ட பிரஜைகள் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தளபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

# இராணுவத்தினால் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்கைநெறிகள்







கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தினரால் தம் அதிகார எல்லைக்குட்பட்ட சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களுக்கு மொழி கற்பித்தல் திட்டத்தின் ஓர் அங்கமாக 2023 நவம்பர் 21 நெலும்வெவ மகா வித்தியாலயம் மற்றும் சிங்கபுர மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 200 சிங்கள மாணவர்களுக்கு தமிழ்கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வருட கால தமிழ் மொழி பாடத்திட்டத்தின் ஆரம்ப விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு பாதுகாப்பு படை தலைமையக தளபதி , 23 வது காலாட் படைப் பிரிவின் தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் மொழிபுலமையுடைய இராணுவ அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் இயங்கவுள்ள இந்த கற்கைநெறியின் அலோசகராக சிங்கபுர மகா வித்தியாலயத்தின் உப அதிபர் திரு. நந்தசேன அவர்கள் பணியாற்றவுள்ளார். வார இறுதியில் நடத்தப்படவுள்ள இந்த கற்கைநெறி நன்கொடையாளர்களின் அனுசரணையில் இடம்பெறவுள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் திம்புலாகல வலயக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் இரு பாடசாலைகளின் மாணவர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## கதிரவெளி

கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 23 வது காலாட் படைப்பிரிவின் ஏற்பாட்டில் கதிரவெளி விக்னேஸ்வரம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு “சட்ட விரோத போதைப்பொருள் பாவனையின் அபாயகரமான விளைவுகள்” குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சியொன்று 2023 நவம்பர் 21ம் திகதி இடம்பெற்றது. இதன்படி, மட்டக்களப்பு தேசிய அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதான இணைப்பாளர் திரு.பீ.தினேஷ் அவர்களால் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. இந்த பெறுமதிமிக்க விரிவுரையில் பாடசாலையின் 300 மாணவர்களும் 15 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



## இறால்குளம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் இறால்குளம் பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானமுடைய 50 குடும்பங்களுக்காக 7600.00 பெறுமதியான உலர் உணவு பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் இறால்குளம் அரசினர் கலவன் பாடசாலையின் 41 மாணவர்களுக்கும் பெரியவட்டுவான் பாடசாலையில் பயிலும் 17 மாணவர்களுக்கும் 200,000.00 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்த நிகழ்வு 2023 செப்டெம்பர் மாதம் 23 திகதி இராள்குளம் அரசினர் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.



## கண்ணாட்டுகேணி

சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தின் கீழ் பணிபுரியும் சிப்பாய்கள் மற்றும் பிற நன்கொடையாளர்களின் அனுசரணையில் கண்னாட்டுகேணி தமிழ் கலவன் பாடசாலை , கொக்குதொடுவாய் தமிழ் பாடசாலை, கோகிலாய் தமிழ் பாடசாலை, மற்றும் கோகிலாய் சிங்கள கலவன் பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் 201 மாணவர்களிடையே பாடசாலை காலணிகள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வொன்று 2023 அக்டோபர் 03ம் திகதி முல்லைத்தீவு வித்தியானந்தா தேசிய பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது



## சுதந்திபுரம்

68 வது படைப்பிரிவு கட்டளை பிரதேசத்தில் வசிக்கும் சிவில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கத்துடன் 9 வது இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி அமைந்திருக்கும் மு/சுதந்திபுரம் மகா வித்தியாலயத்தின் மின் தொகுதியை மீள்திருத்தம் செய்யும் சமூக நலத்திட்டமொன்று 2023 நவம்பர் 05ம் திகதி முதல் நவம்பர் 09 வரை மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவகர்கள் மற்றும் இராணுவத்தினரிடையே சந்திப்பொன்று இடம்பெற்றது.



**கரவெட்டி**

52வது காலாட் படைப்பிரிவு மற்றும் 521 வது காலாட் பிரிகேட்டிற்குரிய 4வது சிங்க படையணியினரால் நடத்தப்பட்ட சமூக நலத்திட்டங்களை மென்மேலும் விரிவுபடுத்தும் வகையில் கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச கிராம சேவகர்களிடையே சந்திப்பொன்று குறித்த படையணி முகாமில் 2023 செப்டெம்பர் 17ம் திகதி இடம்பெற்றது.

# தொழிலாண்மையை வலுவூட்டும் சங்கத்தின் கூட்டம்

**முல்லைத்தீவு**

59 வது காலாட் படைப்பிரிவின் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து அரச நிறுவனங்களின் நிறைவேற்று தர அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அிகாரிகளிடையே நல்லிணக்கத்தையும் தொழிற்திறமையையும் மேம்படுத்துவதற்கு அவசியமான சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. குறித்த சங்கம், 59 வது காலாட் படைப்பிரிவின் தளபதி, 591 வது காலாட் பிரிகேட்டின் தளபதி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திரு. உமா மகேஸ்வரன் ஆகியோரது தலைமையில் 2023 அக்டோபர் 05 திகதி நிறுவப்பட்டது.



# முல்லைத்தீவு கடற்கரையில் சங்கீத நிகழ்வொன்று

12 வது காலாட் படைப்பிரிவின் சங்கீத குழுவினர், 3ம் கஜபா படையணியின் சங்கீத குழுவினர், மற்றும் முல்லைத்தீவு சாரங்கா ஆடல் குழுவினர் இணைந்து பொது மக்கள் கண்டுகளிப்பதற்காக ஆடல் பாடல் நிகழ்வொன்றை செப்டெம்பர் 30ம் திகதியன்று முல்லைத்தீவு கடற்கரையில் நடத்தினர். முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தளபதியின் எண்ணக்கருவிற்கேற்ப 59 வது காலாட் படைப்பிரிவு தளபதியின் மேற்பார்வையின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

**முல்லைத்தீவு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் தலைமையில் விழாவாடி விநாயகர் கோயில் கும்பாபிஷேசம்






சுமார் 4 ஆண்டுகளாக பராமரிப்பின்றி கைவிடப்பட்டிருந்த அம்பாறை விழாவாடி விநாயகர் கோயிலின் கும்பாபிஷேக விழாவை நடத்துவதற்கு ஆலய பரிபாலனத்திற்கு அவசியமான உதவிகளை கிழக்குப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 24 வது காலாட் படைப்பிரிவினர் வழங்கினர். 24 வது காலாட் படைப்பிரிவின் தளபதி, சிரேஷ்ட அதிகாரிகள், அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் உள்ளூர் பக்தர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டனர்.




## 23 வது காலாட் படைப்பிரிவின் புத்தரிசி நிகழ்வு

23 வது காலாட் படைப்பிரிவு தளபதியின் எண்ணக்கருவிற்கேற்ப குறித்த படைப்பிரிவிற்குரிய 23 ஏக்கர் நிலம் பயிரிப்பட்டு அறுவடை செய்யப்பட்டது. அறுவடையின் பின்னர் புத்தரிசி உற்சவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி குறித்த படைப்பிரிவிற்குரிய வயல்வெளியில் படைப்பிரிவின் உயர் அதிகாரிகள், சிப்பாய்களின் பங்குபற்றலில் இந்து மத சடங்குகளின் படி முதல் பாகம் பிள்ளையாருக்கு படைக்கப்பட்டு குறித்த நிகழ்வு நடத்தப்பட்டது.

## புதுக்குடியிருப்பில் கைவிடப்பட்ட நிலங்களை பயிர்செய்கை மேற்கொள்வதற்காக இராணுவத்தால் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.



சுதந்திபுரம்

03 வது (தொ) விஜயபாகு காலாட் படையணி மற்றும் 9 வது தேசிய பாதுகாவலர் படையினர், ஒக்டோபர் 19ம் திகதி புதுக்குடியிருப்பு மற்றும் சுதந்திபுரம் பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானமுடைய மூன்று விவசாயிகளுக்கு, அவர்களின் தரிசு நிலங்களை பயிர்செய்கைக்கு உகந்த வகையில் உழுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர். குறித்த நிலங்கள், விதை நெல் மற்றும் நிதி நெருக்கடியால் 14 ஆண்டுகளாக கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 74 இராணுவ ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வுகள்




இலங்கை இராணுவத்தின் 74வது இராணுவ ஆண்டு நிறைவை முன்னிட்டு 'சேருவில சஹன செவன' இல்லத்தில் வசிக்கும் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு அவசியமான பொருட்கள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வொன்று 9 வது விஜயபாகு காலாட் படையலகின் படையினரால் 06 ஒக்டோபர் 2023 திகதியன்று மேற்கொள்ளப்பட்டது.

'சுவ தரு 2023' திட்டத்தின் கீழ் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களின் 'மிதுருகேல' (நண்பர் வட்டம்) ஆகியவற்றின் பிரதம ஒருங்கிணைப்பாளர் திரு.பிரசாத் லொகுபாலசூரிய அவர்கள் வழங்கிய நிதி உதவியில் குறைந்த வருமானம் கொண்ட 32 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.




552 வது காலாட் பிரிகேட் மற்றும் 22 வது விஜயபாகு காலாட் படையணியினரின் சிப்பாய்களால் 2023 அக்டோபர் 02ம் திகதி 'கௌதாரிமுனை வினாசியோடை' தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர்களுக்காக காலணிகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வொன்று குறித்த பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்காக கொழும்பு 07 றோயல் கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பழைய மாணவர்களால் நிதியுதவிகள் வழங்கப்பட்டன. மேலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு தென்னம்பிள்ளைகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வொன்றும் இடம்பெற்றது.




இராணுவத்தின் 74 வது வருட நிறைவை முன்னிட்டு, இவ் வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக கல்விக் கருத்தரங்கொன்று 2023 அக்டோபர் 08ம் திகதியன்று ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2வது இலங்கை தேசிய பாதுகாப்பு படையணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் 253 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**யாழ்ப்பாணம்**

74வது இராணுவத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு 523 வது காலாட் பிரிகேட் படையினரின் வழிகாட்டலின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாராத்தை உயர்த்தும் நோக்கத்துடன் 11 வது இலங்கை பொறியியல் படையணி மற்றும் 7 வது விஜயபாகு காலாட் படையணியின் தென்னம் பிள்ளைகள் வழங்கும் நிகழ்வொன்று 2023 அக்டோபர் 10ம் திகதி இடம்பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசணை மிகுந்த உணவு

கிழக்கு பாதுகாப்பு படை தலைமையக தளபதியின் எண்ணக்கருவிற்கேற்ப 233 வது காலாட் பிரிகேட் படையினர், வெலிகந்த பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த 80 கர்ப்பிணிப் பெண்களுக்கு போஷாக்குணவு பொதிகளை வழங்கும் சமூகத் திட்டமொன்றை வெலிகந்த கலாசார நிலையத்தில் 2023 நவம்பர் 23 முன்னெடுத்தனர்

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திரு.சமிந்த ஜயதிலக்க அவர்கள் இந்த திட்டத்திற்காக ரூபாய் 600,000.00 நிதியுதவியை வழங்கினார். இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு பாதுகாப்பு படை தலைமையக தள்பதி கலந்து கொண்டார்.







பொருளாதார சிக்கல்களின் மத்தியில் வாழும் கர்ப்பிணி தாய்மார்களின் போசணை தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் 243 காலாட் பிரிகேட் படையினர், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் வசிக்கும் 100 கர்ப்பிணித்தாய்மார்களுக்கு அவசியமான போசாக்கு மிகுந்த உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வொன்று 2023 அக்டோபர் 20 திகதியன்று கொக்கட்டிச்சோலை கலாசார மையத்தில் நடத்தினர். கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையக தளபதியின் வேண்டுகோளின் படி இலங்கை மெதடிஸ்ட் தேவாலயத்தின் ஆயர், தேசிய கிருஸ்தவ சபையின் முன்னாள் செயலாளர் மற்றும் சமாதானத்திற்கான மதங்களுக்கிடையேயான ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை எபனேசர் ஜோஸப் ஆகியோர் இந்நிகழ்விற்காக ரூபாய் 750,000.00 பெறுமதியான உலர் உணவு பொதிகளை அன்பளிப்பு செய்தனர்.

# நோயாளர்களுக்கோர் உதவிக்கரம்




17 வது இலங்கை இலேசாயுத காலாட் படையினர் வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் மின் தூக்கி செயலிழந்தமையினால் நோயாளிகளுக்கு உதவினர். மின் தூக்கி செயலிழந்தமையினால் நோயாளிகளை மேல்மாடியில் இருந்து கீழே கொண்டு செல்வதில் சிரமத்தை எதிர்கொண்ட மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் உதவியை நாடினர். 17 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணி 4 நாட்களுக்கும் மேலாக 5 சிப்பாய்களை அனுப்பி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

# கட்டைக்காடு தேவ ஆராதனைக்கு இராணுவம் உதவியது.

52 வது காலாட் படைப்பிரிவிற்குரிய 522 வது காலாட் பிரிகேட் படையினரால் ஒரு மாத காலமாக பங்களிப்பு வழங்கப்பட்ட கட்டைக்காடு பிரதேசத்தில் அமைந்திருக்கும் புனித மரியாள் தேவாலயத்தின் விசேட இறுதி பூஜைகள் நவம்பர் மாதம் 19ம் திகதி இடம்பெற்றன. இந்நிகழ்விற்கு இராணுவ அதிகாரிகள் , இராணுவ சிப்பாய்கள் 2500ற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த செயற்பாட்டின் கீழ் ஆலய வளாகத்தில் 45 தென்னம் பிள்ளைகள் நடப்பட்டதோடு தேவ பூஜையில் கலந்து கொண்ட வணக்கத்திற்குயோர்க்கு காலை உணவும் வழங்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வன்னி படையினரால் புதிய வெதுப்பகம்







தரமான சிற்றுண்டிகளை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் நோக்கத்தில் வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தால் நிர்வகிக்கப்படும் "வன்னி புட் சிட்டி" நிலையத்தில் "வன்னி பேக்கர்ஸ்" எனும் பெயரில் வெதுப்பகமொன்று நிறுவப்பட்டது. குறித்த வெதுப்பகம் 2023 அக்டோபர் 14ம் திகதி மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

# "சமாதான தினம்" கொண்டாடப்பட்டது

முல்லைத்தீவு

59 வது காலாட் படைப்பிரிவின் அறிவுரையின் பேரில் 591 காலாட் பிரிகேட் இன் மேற்பார்வையின் கீழ் ஐக்கிய நாடுகளின் சமாதான தினத்தை முன்னிட்டு உலக சமாதான சங்கத்தின் மூலம் முல்லைத்தீவு பிரதேச சபைக்குரிய மண்டபத்தில் சமாதான தினத்தை கொண்டாடும் நிகழ்வொன்று 2023 அக்டோபர் 21ம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் 65 இராணுவ அங்கத்தவர்கள் மற்றும் 500ற்கும் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் பிரதம அதிதியாக முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தலைமையக தளபதி மற்றும் கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ கே கே மஸ்தான் அவர்களும் வருகை தந்திருந்தனர்.






# இராணுவத்திடமிருந்து அன்பளிப்புகள்.



முத்து ஐயன்கட்டுகுளம்

முத்து ஐயன்கட்டுக்குளம் கிராமசேவை பிரிவில் வசிக்கும் கே. ராஜா அவர்களுக்காக இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு நபர் தம் வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு மீன் வலையொன்றின் அவசியம் தொடர்பாக இராணுவ அதிகாரிகளிடம் முறையிட்டார். அதன்படி 64வது காலாட் படைப்பிரிவின் தளபதியின் பரிந்துரையின் பேரில் கொடையாளியொருவரால் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் புதிய மீன் வலையொன்று குறித்த பயனாளிக்கு வழங்கும் நிகழ்வொன்று அக்டோபர் 21 திகதியன்று இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகாதாரத்தில் அக்கறை கொள்ளும் இராணுவம்





### பொலனறுவை

கிழக்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 20 வருட பூர்த்தியை முன்னிட்டு குறித்த படையினர், பொலனறுவை இரத்த வங்கியுடன் இணைந்து 2023 நவம்பர் 02ம் திகதியன்று இரத்ததான நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வின் மூலம் 100 ற்கும் அதிகமான இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவ சிப்பாய்கள் இரத்த தானம் செய்தனர்.



### முல்லைத்தீவு

இராணுவத்தின் 74 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 64 வது காலாட் படைப்பிரிவினர் முல்லைத்தீவு வைத்தியசாலையுடன் ஒருங்கிணைந்து 2023 அக்டோபர் 15ம் திகதியன்று இரத்ததான நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இவ் இரத்ததான நிகழ்வில் 90க்கும் அதிகமான இராணுவ வீரர்கள் தம் இரத்தத்தை தானமளித்தனர்.

12 இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி சிப்பாய்களால் கண் பிணியாய்வு நிகழ்வொன்று 2023 அக்டோபர் 28ம் திகதி தொப்பிக்கல் பிரதேசத்தில் நடத்தப்பட்டது. தொப்பிக்கல் பிரதேசத்தின் 12 கிராமசேவை பிரிவுகளில் நடத்தப்பட்ட இந்த பிணியாய்வுகளின் மூலம் பார்வை குறைபாடுள்ள 150 நபர்களுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன. குறித்த நிகழ்ச்சி புலிபாய்தகல் சுகாதார வைத்திய அலுவலக வளாகத்தில் ஜோர்ஜ் குணரத்ன நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெற்றது. .

### புலிபாய்தகல்





### மன்னார்

542 காலாட் பிரிகேட் இராணுவ வீரர்களின் ஒருங்கிணைப்பிலும் "மனுசத் தெரண" அமைப்பின் அனுசரணையிலும் 2023 அக்டோபர் 28ம் திகதி மன்னார் மாவட்டத்தில் வைத்திய முகாமொன்று நடத்தப்பட்டது. மன்னார் முருக்கன் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இந்த வைத்திய முகாமின் மூலம் 623 ற்கும் அதிகமான பொதுமக்கள் பயன்பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒருவன் தன் முட்டாள்தனத்தை உணர்ந்து கொள்ளும் போது அவன் அறிவாளியாவான்.

பெரிதாக காசு பணம் இல்லாதவர்கள் சோம்பேறித்தனத்தின் காரணமாக இலகுவாக பணம் தேடுவது எப்படி என யோசித்து, அது நல்லதா? கெட்டதா? பாவமா? புண்ணியமா?என்ற விஷயங்கலெல்லாம் ஒதுக்கி காசுக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஒருசிலர் காசுக்காக உயிர்களை கொல்வார்கள். சிலர் திருடுவார்கள். வீடுகளுக்கு புகுந்து கொள்ளை அடிப்பார்கள். தங்கச்செயின்களை பறித்துக் கொண்டு ஓடுவார்கள். சிலர் தகாத காமத்தில் ஈடுபட்டு அதன் மூலம் பணம் சம்பாதிப்பார்கள். ஏனையோரின் குடும்பங்களை களைப்பார்கள். இன்னும் சிலர் பொய் சாட்சிகள் சொல்லி, வஞ்சனைகள் செய்து பொய் பேசி, புரளிகள், கிசுகிசுப்புகள் சொல்லி அதன் மூலம் காசு தேடுவார்கள். இன்னும் சிலர் சாராயம் வடித்து, சாராயம் விற்று பிழைப்பு நடாத்துவார்கள். இவை எல்லாம் பிழையான ஜீவனோபாய வழிகளாகும். அதாவது பிழையான முறையில் பணம் ஈட்டுவதாகும்.

மக்கள் நல்ல கூட்டமாக சேரும் இடங்களில் திருடுபவர்கள் இருக்கிறார்கள். பஸ்களில், கூட்டங்களில், புகையிரதவண்டிகளில் காசு வைத்திருக்கும் பையை காணாமல் திண்டாடுபவர்களை நீங்கள் கண்டதில்லையா? புத்த பகவான் வாழ்ந்திருந்த காலத்திலும் இத்தகைய இரண்டு திருடர்கள் இருந்தார்கள். இந்த கதை அந்த திருடர்கள் தொடர்பானதாகும். பாரதத்தின் மத்திய பிரதேசத்தல் சாவத்தி எனும் பெயரில் பெரிய நகரமொன்று இருந்தது. அந்த நகரத்தில் புத்த பகவான் வாழ்ந்திருந்த காலத்தில் ஏழு கோடி மக்கள் வாழ்ந்திருந்தார்கள்.

இந்த நகரில் அருகருகே அமைந்த வீடுகளில் வசித்த இருவர் திருடுவதையே தொழிலாக கொண்டிருந்தனர்.இவர்களும் வெள்ளை உடுத்திக் கொண்டு பூக்களை எடுத்துக் கொண்டு பக்திமான்களைப் போல ஆயிரக்கணக்கானோர் கூடியிருக்கும் தர்மநிகழ்ச்சிகளுக்குச் செல்வார்கள். சென்று அங்கு கூடியிருக்கும் மக்களின் பணப்பைகளை (பர்ஸ்களை) எடுத்துக் கொண்டு மாயமாக மறைந்துவிடுவார்கள். இந்த திருடர்களின் மனைவிமாரும் இந்த தொழிலை மிகவும் பாராட்டினார்கள். இவர்கள் அதிகமாக திருடிய நாட்களில் அந்த மனைவிமார் இந்த திருடர்களை புகழ்ந்து இன்னுமின்னும் திருடுவதற்கு ஊக்குவிப்பார்கள்.

ஒருநாள் இந்த இருவரும் வழமைபோல ஒரு தர்மநிகழ்ச்சியிற்கு திருடுவதற்காக சென்றார்கள். அன்று புத்த பகவான் இனிமையாக தர்மத்தை போதிக்கும் போது ஒரு திருடனது மனம் அந்த தர்மத்தின் மீது கவரப்பட்டது. அவனுக்கு வந்த வேலை மறந்துவிட்டது. அவன் மிகவும் உன்னிப்பாக அந்த தர்மத்தை கேட்டான். அவனுள் இருந்த "திருட வேண்டும்" எனும் எண்ணமே இல்லாமல் போய்விட்டது. அவன் மிகவும் கவனிப்புடனும் அவதானத்துடனும் தர்ம போதனையை கேட்டுக்கொண்டிருந்தான்.

போதனையின் மூலம் கர்மங்கள் மற்றும் அதன் பலன்கள், காரண காரிய செயற்பாட்டு முறை, நாற்பேருண்மை என்பன தொடர்பாக அவனுக்கு நல்லதொரு புரிந்துணர்வு கிடைத்தது. இவ்வாறாக சிரத்தையுடன் ஒருமித்த மனதுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தை செவிமடுத்த அவன் முதலாது ஞானப்பேற்று நிலையை அடைந்தான்.

இதுவரை தாம் ஒருபோதும் உணர்ந்திராத பேரின்ப நிலையில் அவரது மனம் மூழ்கியது. அவர் தமக்கு தாமே இவ்வாறு சபதம் செய்துகொண்டார். "சோறில்லாமல் செத்தாலும் பரவாயில்லை. இனிமேல் கடுகளவான பொருளைக் கூட யாரிடமிருந்தும் நான் திருடமாட்டேன்" என்று. அன்று அவர் வெறுங்கையுடன் ஆனால் ஆனந்தத்தினால் நிறைந்த மனதுடன் வீட்டிற்கு சென்றார். ஆனால் அவரது நண்பன் அன்றும் வழமைப் போல ஒருவரின் பணப்பையை திருடிக்கொண்டு வீட்டிற்கு சென்றான். அன்றைய இரவு திருடியவனது வீட்டில் சோறு சமைத்து அனைவரும் சாப்பிட்டு கொண்டிருக்கும் போது திருட்டை கைவிட்டவரது வீட்டில் சாப்பிடுவதற்கு எதுவுமே இருக்கவில்லை. திருட்டை கைவிட்டவர், "திருட்டை கைவிட்ட நான், இப்போது கைகால்களை பயன்படுத்தி உழைப்பதற்கு என்ன செய்ய வேண்டும். நல்ல வழியில் எப்படி பணம் தேடுவது? அதற்கு என்ன வழி ?" என அவர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு யோசிக்க ஆரம்பித்தார். இது எதுவுமே தெரியாத அவரது மனைவி அவருடன் சண்டை பிடிக்க ஆரம்பித்தாள்.

"ஐயோ.. ஐயோ.. என்ட புருஷனது முன்னேறத்தை இங்க பார்க்க யாருமே இல்லையா..? சோற்றுபானையும் வயிறும் காலியானதுதான் இவரது முன்னேற்றம். வெறுந்தண்ணி மட்டும்தான் சாப்பாடு, ஏதோ ஞானப்பேறு கிடைச்சிருச்சாம்..! ஐயோ அங்கே பார்.. அந்த வீட்டில என்ன சாப்பிடுறாங்க என்டு..!அவர்களுக்குதான் உண்மையான ஞானம் கிடைச்சிருக்கு... அந்த மீன் குழம்போட வாசம் வருதா..? ஞானத்தை பயன்படுத்துறது இதுக்குதான். அதவிட்டு இப்படி வெறும்பானைய வைச்சுகிட்டு மேல பார்த்துகிட்டு இருக்கிறதில்ல" என்று கத்த ஆரம்பித்தாள்.

அவர் ஒன்றும் பேசவில்லை. அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். பின்னேரம் புத்த பகவானை காண்பதற்காக ஜேதவனராமத்திற்கு சென்றார். பகவானை கண்டு அன்புடன் வணங்கி நடந்த எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொன்னார்.

"பகவானே...! நான் நேற்றுவரை இன்னுமொருவரின் துக்கத்தை பற்றி கவலைப்படாத சுயநலமான வாழ்க்கையையே வாழ்ந்து வந்தேன். பாவகரமான வாழ்க்கையே வாழ்ந்தேன். என்னிடம் பாவ புண்ணியங்கள் தொடர்பாக எந்த அறிவும் இருக்கவில்லை. நேற்று தங்களுடைய போதனையை கேட்ட பின்னர்தான் "நான் எத்தகைய கீழ்த்தரமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறேன், என்பதை உணர்ந்தேன். நானே செய்து கொண்ட கர்மங்களினால் நான் பாவியாகினேன். நான் இப்போது அவ் அனைத்து கர்மங்களையும் கைவிட்டுவிட்டேன்.

ஆனால் எனது மனைவி மக்கள் என்னை திட்டுகிறார்கள். திருடிய எனது நண்பன், அவன் செய்த வேலையே அறிவுள்ள வேலை. நான் ஏதோ முட்டாள்தனமாக நடந்துகொள்கிறேன். என சொல்கிறான். அச்சமயம் புத்த பகவான் மகா கருணையுடன் இந்த செய்யுளை போதித்தார்.

**யோ பாலோ மஞ்ஞதி பால்யங் – பண்டிதோ வாபி தேன**
**சோபாலோ ச பண்டிதமானி – ச வே பாலோதி வுச்சதி**

எவரேனும் ஓர் அஞ்ஞான மூடன் தன் அறிவின்மையை உணர்ந்துக்கொள்வானாயின்,அவன்அந்தவிடயத்தினாலேயே அறிவாளியாவான். ஆனால் அஞ்ஞானமிக்க முட்டாள், தன்னை ஒரு அறிவாளியென்றி நினைத்துக் கொண்டிருப்பானாயின் அவனை கண்டிப்பாக மகா மூடன் என்றே கூற வேண்டும். பிள்ளைகளே, அந்த திருடன் தன் தவறை உணர்ந்து அதிலிருந்து மீள்வதற்கு தர்மத்தை கேட்டதே உதவியாக அமைந்தது. சரியாக தர்மத்தை கேட்கும்போது அந்த தர்மத்தின் வழியே தன்னைக் காண முடியும். தன் குறை நிறைகளைக் காண முடியும். தான் இதுவரை பாவமிகுந்த நடத்தையுடன் வாழ்ந்திருப்பதாயின், அவர் தன் பிழைகளை உணர்ந்து தன்னை திருத்திக் கொள்ள நினைப்பார். இக்கதையில் கூறப்படும் இந்த திருடன் அவ்வாறு உணர்ந்து கொண்டதாலேயே அவன் தன் தவறுகளை நிவர்த்தி செய்து கொண்டான். சரி செய்து கொண்டான். அவன் தவறான பாதையிலிருந்து விலகி சரியான பாதையில் பயணிக்க ஆரம்பித்தான். இதிலிருந்து ஒரு விடயத்தை நன்கு உணரந்துக் கொள்ள முடியும். தீய வழியில் பயணித்த ஒருவரேயானாலும், தான் இதுவரை தவறான வழயிலேயே பயணித்ததை உணர்ந்துகொள்வானாயின் , அவன் செய்ய வேண்டியதெல்லாம் உடனடியாக தம் பிழைகளை கைவிட்டு தம்மை சரியான பாதையில் செலுத்துவதாகும்.


ஆனால் தவறான பாதையில் பயணிக்கின்ற, தவறுகள் செய்கின்ற, கீழ்தரமான குணங்கள் கொண்ட, இழிவான நடத்தைகளுடையவன் தான் செய்யும் இழிவான கேவலமான வேலைகளை ,ஏதோ வீரத்தனமான செயல்களாக நினைத்துக் கொண்டு பேசிக்கொண்டிருப்பானாயின் அவனை விட முட்டாள்கள் வேறு யாருமில்லை.

**"ஐயோ.. ஐயோ.. என்ட புருஷனது முன்னேற்றத்தை பார்க்க இங்க யாருமே இல்லையா..? சோற்றுபானையும் வயிறும் காலியானதுதான் இவரது முன்னேற்றம். வெறுந்தண்ணி மட்டும்தான் சாப்பாடு, ஏதோ ஞானப்பேறு கிடைச்சிருச்சாம்..! ஐயோ அங்கே பார்.. அந்த வீட்டில என்ன சாப்பிடுறாங்க என்டு..!அவர்களுக்குதான் உண்மையான ஞானம் கிடைச்சிருக்கு... அந்த மீன் குழம்போட வாசம் வருதா..? ஞானத்தை பயன்படுத்துறன்றது இதுக்குதான். அதவிட்டு இப்படி வெறும்பானைய வைச்சுகிட்டு மேல பார்த்துகிட்டு இருக்கிறதில்ல" என்று கத்த ஆரம்பித்தாள்."**

**வணக்கத்திற்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்





51 வது காலாட் படைப்பிரிவின் தலைமையில் யாழ் குடாநாட்டில் இளைஞர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் யோகபுரம் மகளிர் கரப்பந்தாட்ட குழுவினர் மற்றும் 7 வது இலங்கை மகளிர் படையணி குழுவினர்க்குமிடையே வொலிபோல் போட்டியொன்று 2023 அக்டோபர் 17ம் திகதி குறித்த குறித்த படை வளாகத்தில் இடம்பெற்றது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியின் இறுதியில் யோகபுரம் மகளிர் அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. குறித்த விளையாட்டு போட்டியை கண்டுகளிப்பதற்காக இராணுவ மகளிர் படையணி சிப்பாய்கள், அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் கூடியிருந்தனர்.

## உங்கள் கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

பாதுகாப்பு படை தலைமையகம்
(யாழ்ப்பாயணம்) 021 2222112

பாதுகாப்பு படை தலைமையகம் (வன்னி)
024 2222152

பாதுகாப்பு படை தலைமையகம் (கிழக்கு)
027 2259137

பாதுகாப்பு படை தலைமையகம்
(முல்லைத்தீவு)
011 3009729

இராணுவ தலைமையகம்
011 2993076

**மின்னஞ்சல்**
*ranaviruwa@yahoo.com*





**முகவரி**
இராணுவ தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுரம்
கொழும்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திறமைக்கோர் மேடை



## இயற்கை...!

பச்சை பசேல் என்ற வயலுக்கு நடுவில் நடந்து செல்வதில் ஒரு சுகம்...
பூத்த பூக்களை பார்ப்பதில் ஒரு சுகம்...
குயிலின் கானங்களை கேட்பதில் ஒரு சுகம்...
காற்றுக்கோ வேலியில்லை... கடலுக்கோ ஓய்வு இல்லை...
பறவைக்கு எல்லையில்லை... இயற்கைத்தாயின் பெருந்தன்மைக்கு
அளவுகளே இல்லை....
நம் மன அமைதிக்காக அவள்தான் அக்கறைக் கொள்கிறாள்.
தோழியாக, காதலியாக, அன்னையாக மாறும் அவள் ஒரு அருமருந்து

சுதாதர்ஷனி - தியத்தலாவை

## பிள்ளை நேயப்பள்ளி...!

பள்ளி நேயப்பளியின் பெருமை பேச இயலுமோ
கொள்ளை கொள்ளும் ஓவியம் - குலுங்கும் அழகுப்பூச்செடி
பந்தடிக்க பெருவெளி - பயில அழகு மண்டபம்
மின்னினைத்த விசிறிகள் - மேலும் ஒளிரும் குமிழிகள்
வீட்டில் இல்லா ஏணிகள் - விரும்பியாட ஊஞ்சல்கள்
நாட்டம் கொள்ள வைக்குதே - நாளும் இன்பம் மொய்க்குமே
ஆடல், பாடல், அபிநயம் - ஆசையோடு பயிலவும்
ஓடிப்பாடி மகிழவும் - உயரந்த நேயப்பள்ளியே
ஊட்டம் மிக்க உணவுகள் - ஒழுங்கு மிக்க பயிற்சிகள்
காட்டும் திறமை ஓங்கவே - களிப்பு மிக்க செயன்முறை
அன்பு மிக்க அதிபரும் - அறிவு சொல்லும் வாத்திமார்
பண்பு கொண்ட மழலைகள் - பயிலும் பள்ளிக்கூடமே
-நன்றி-

க.கதீஷியா - தரம் 02
தி மு கல்வடி ஸ்ரீ மலைநீளியம்மன் வித்தியாலயம்

## பட்டாம்பூச்சி...!

பட்டாம் பூச்சிச்சிறகு - பார்க்கப் பார்க்க அழகு
எட்டி எட்டிப் பாரு - என்ன என்ன அழகு..!
குந்திக் குந்தி பறந்து - குவிந்த சிறகை விரித்து
மனதைக் கவர்ந்து - நன்றாய் பறத்தல் பாரு
விட்டு விட்டு மின்ன - வெயிலில் பறந்து செல்லும்
பட்டாம் பூச்சி பாரு - பார்க்க பார்க்க அழகு

ஷெஷ்மிதா - தரம் 08
நட்டுக்கண்டல்

## பாடுங்கள்...!

தரையின் மேலே தொட்டி பார் - தொட்டி மேலே செடியைப் பார்
செடியின் மேலே பூவைப் பார் - பூவின் மேலே வண்டைப் பார்.
வண்டின் மேலே பளபளக்கும் - வர்ணம் உண்டு அதையும் பார்.

எஸ் டயனா - தரம் 9
பளிநகர் தேசிய பாடசாலை

## காதல்...!

முகம் பார்த்து வந்த காதல் மறைந்து விடும்
பணம் பார்த்து வந்த காதல் பறந்து விடும்
உள்ளம் பார்த்து வந்த காதல் உயிர் உள்ள வரை தொடர்ந்து வரும்

நிரோஜா - தரம் 11

## வெந்தயத்தின் மகிமைகள்



பருக்கள் என்பது பெரும்பாலானவர்களுக்கு பெரிய பிரச்சினையாக இருக்கும் நிலையில் ஒரு சில கிராம் வெந்தயம் இருந்தால் போதும் பருக்களை மறைய வைக்க மாயாஜாலம் நடக்கும் என்று கூறப்படுகிறது. வெந்தயத்தை ஊற வைத்து அரைத்து அதை சில நாட்கள் முகத்தில் பூசி வந்தால் பருக்கள் குறையும் என்றும் ஒரு முறை பருக்கள் மறைந்து விட்டால் மீண்டும் பருக்கள் வராது என்றும் கூறப்படுகிறது

வெந்தயத்தில் அந்த அளவு சக்தி இருக்கிறது. மேலும் வெந்தயம் வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்தும் என்றும் வெந்தயத்துடன் சோம்பு உப்பு சேர்த்து அரைத்து மோரில் கலந்து குடித்தால் உடனடியாக வயிற்றுப்போக்கு நிற்கும் என்றும் கூறப்படுகிறது. வெந்தயம் என்பது நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்தது என்றும் முதல் நாள் இரவு வெந்தயத்தை தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் காலையில் அந்த தண்ணீரை குடித்தால் படிப்படியாக நீரிழிவு நோய் குணமாகும் என்றும் கூறப்படுகிறது.

கிருபாணி – சிலாபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது முப்படைகள்...!

இந்து சமுத்திரத்தின் முத்தாகிய இலங்கையின் பாதுகாப்பையும் நாட்டு மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நாட்டை சுற்றி அமைந்த தங்கவேலியே முப்படையினராவர். கடற்படை, விமானப்படை, தரைப்படை என்பனவே முப்படைகளாகும். நாட்டை காப்பதில் இந்த முப்படையினரின் பங்களிப்பு எத்தகையது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

விமானப்படை தேசிய பாதுகாப்பிற்கு உதவும் விதமாக வான் நடவடிக்கைகளுக்கு தொழில் முறை ரீதியான விமானப்படையின் திறன்களை ஒழுங்குபடுத்தி பயிற்சியளித்து தயார்படுத்துதல், தந்திரோபாய நடவடிக்கைகளுக்கு ஆகாய உதவியை வழங்குவதுடன் தரை மற்றும் கடற்படையினர்க்கு போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தல்.

தரைப்படை மற்றும் கடற்படை : தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை முன்னுரிமையாகக் கொண்டு இலங்கையை இறைமை பொருந்திய ஒற்றையாட்சிக்குட்பட்ட நாடாக்குதல் மற்றும் நாட்டு மக்களின் அபிலாஷைகளைக் கட்டிக்காத்து தரை மற்றும் கடற் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

**அந்த முப்படையினர்க்கு எமது மரியாதைகள்..!**

எஸ். வடுணியா
தரம் 11
கணபதி தமிழ் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org